# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்


எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 62/ந/2024
நாள்: 27.12.2024

திரு. மு. நாட்டரசன்,
சிவகங்கை நகராட்சி, சிவகங்கை மாவட்டம். ... முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
சிவகங்கை நகராட்சி, சிவகங்கை மாவட்டம். ... எதிர்மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை, ராஜாஜி தெரு, க.எண்.5/1 என்ற முகவரியை சேர்ந்த திரு. மு. நாட்டரசன் என்பவரது 01.05.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.05.2024 அன்று பெறப்பட்டு, 62/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை, ராஜாஜி தெரு, க.எண்.5/1 என்ற முகவரியை சேர்ந்த திரு. மு. நாட்டரசன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

“நான் சிவகங்கை நகராட்சில் ஒப்பந்ததாரராக பல பணிகளை செய்து முடித்துள்ளேன். தற்போது நான்கு ஆண்டுகளாக என்னிடம் பிடித்தம் செய்த பட்டியல் தொகையை திரும்ப அளிக்காமல் என்னை அலைக்கழித்து வருகின்றனர். இது தொடர்பாக நகராட்சி நிர்வாகத்திடம் கடந்த 09.08.2023 மற்றும் 28.12.2023 ஆகிய நாட்களில் பதிவு தபால் மூலமாக அனுப்பி வைத்துள்ளேன். அதற்கான நகலும் இத்துடன் அனுப்பி வைத்துள்ளேன். நேரடியாக கேட்டதற்கு வைப்புத் தொகை கணக்கில் பணம் இல்லை நீங்கள் வேலை பார்த்ததற்கான M Book காணாமல் போய்விட்டது என்று கூறி எனக்கு மன உளைச்சலையும் பண விரயத்தையும் ஏற்படுத்தி வருகின்றனர். ஆகவே இது குறித்து விசாரணை செய்து எனக்கு வழங்க வேண்டிய தொகையை திரும்ப வழங்கவும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்” என கேட்டுக்கொண்டுள்ளார்.

**2)** மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் **29.07.2024** நாளிட்ட அறிவிப்பு மூலம் சிவகங்கை நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

**3)** சிவகங்கை நகராட்சி ஆணையரிடம் இருந்து அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

4) மனுதாரரும் மற்றும் சிவகங்கை நகராட்சி ஆணையரும் **14.11.2024** அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் **22.10.2024** தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. கனமழை எச்சரிக்கை காரணமாக மேற்படி விசாரணை தேதிமாற்றப்பட்டு மனுதாரரும் மற்றும் சிவகங்கை நகராட்சி ஆணையரும் **03.12.2024** அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் **12.11.2024** தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. மு. நாட்டரசன், என்பவர் **03.12.2024** அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

"சிவகங்கை நகராட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்குண்டான பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.3,96,388/– (ரூபாய் மூன்று இலட்சத்து தொன்னூற்று ஆறாயிரத்து முன்னூற்று எண்பத்தெட்டு மட்டும்) மற்றும் FSD தொகை ரூ.84,600/– ஆக மொத்தம் ரூ.4,80,988/– (ரூபாய் நான்கு லட்சத்து எண்பதாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தெட்டு மட்டும்) சிவகங்கை நகராட்சியால் வழங்கப்பட வேண்டியுள்ளது. இதனை விரைவில் வழங்கிட ஆவண செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6)** எதிர்மனுதாரரான சிவகங்கை நகராட்சி ஆணையர் **G.S.கிருஷ்ணாராம்** என்பவர் **03.12.24** அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

"மனுதாரருக்கு கீழ்க்கண்ட விவரப்படி ரூ. 4,80,988/– சிவகங்கை நகராட்சியில் மனுதாரரால் செய்யப்பட்ட பணிகளுக்கு பிடித்தம் செய்யப்பட்ட தொகைகள் வழங்கப்பட வேண்டியுள்ளது.

| Sl. No. | Name of work | FSD 1% | With held amount 5% |
|---|---|---|---|
| 1. | Maintenance works in Amma Unavagam at Sivaganga Municipality | 3,000.00 | 9,914.00 |
| 2. | Rewinding and repair work to mini power pump at SVG Municipality | 2,415.00 | 12,077.00 |
| 3. | Rewinding and repair works to Mini Power pump at SVG Municipality | 2,164.00 | 10,822.00 |
| 4. | Rewinding and repair works to mini power pump at SVG Municipality | 1,421.00 | 7,101.00 |
| 5. | Supplying and Fixing in position of Alu, Anodised position wall at SVG Municipality | 2,500.00 | 12,138.00 |
| 6. | Supplying and Fixing position of Alu.Andiled partition wall and wooden table at SVG Municipality | 800.00 | 3,984.00 |
| 7. | Providing Borewell in near market road at SVG Municipality | 2,000.00 | 10,000.00 |
| 8. | Providing Borewell at ward 21 in Thiyagi Sethuramachandran Street, at SVG Municipality | 1,800.00 | 9,000.00 |
| 9. | Repair and maintenance work in Amma Unavagam at SVG Municipality | 5,000.00 | 16,358.00 |

| | | | |
|---|---|---|---|
| 10. | Construction of UGSS Manhole and raising of Manholes and clearing of sever lines at SVG municipality | 9,800.00 | 49,000.00 |
| 11. | Supplying and Fixing of Alu. Doorio Revenue sec at Municipal office | 800.00 | 3,736.00 |
| 12. | Rewinding and repair works to Mini power pump at SVG Municipality | 7,000.00 | 18,058.00 |
| 13. | Providing Borewell with Mini power pump at W.No.20 Kamala Neru Bevar street. | 1,900.00 | 9,500.00 |
| 14. | Providing Borewell with mini power pump at W.15 Thayumanavar street and W.21 Nelmandi street | 4,300.00 | 21,500.00 |
| 15. | Providing Borewell with Mini Power pump at Ward No.27 Sonaiyuir Koil opposite in SVG Municipality | 1,900.00 | 9,500.00 |
| 16. | Construction of UGSS new manhole at W.No.1CB colony W27 Ilayangudi road work. Raising of Manholes at W.No.;5,8,9,12,17 and 27 in SVG Municipality | 9,800.00 | 46,429.00 |
| 17. | Raising for manhole at W.N.11 Ambedkhar Street W.No.12,13,10,16,20,26 in SVG Municipality.<br>Second part payment | 9,800.00 | 42,199.00<br>6,801.00 |
| 18. | Repair and maintenance ward No.20 college road toilet and near providing of aluanised in street | 2,500.00 | 29,025.00 |
| 19. | Providing culvert arrangements and storm water drain arrangement at W.No.27 at SVG Municipality | 6,000.00 | 23,209.00 |
| 20. | Providing PVC door and painting works at W.No.3 in Municipal colony toilet for SVG Municipality | 1,200.00 | 5,202.00 |
| 21. | Providing Borewell with Gasifer Premises at Ward No.27 | 2,500.00 | 11,580.00 |
| 22. | Providing Bore well with mini power pump at W.No.17 motor Ku8mara Mangalam street W.No.26 Akilandapuram. | 6,000.00 | 29,255.00 |
| | **Total** | **84,600,00** | **3,96,388.00** |

மேலும் சிவகங்கை நகராட்சி கோப்புகளை பரிசீலனை செய்யப்பட்டதில், மனுதாரர் கோரியவாறு மனுதாரரால் செய்யப்பட்ட பணிகளில் பிடித்தம் செய்யப்பட்ட தொகையான ரூ.4,80,988/–(ரூபாய் நான்கு இலட்சத்து எண்பதாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தெட்டு மட்டும்) மனுதாரருக்கு சேரவேண்டிய தொகைதான் என்பதை உறுதி செய்து, மேற்படி தொகையை 10 தினங்களுக்குள் வழங்கப்பட்டுவிடும் என்பதையும் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**7) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், சிவகங்கை நகராட்சி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.**

சிவகங்கை, ராஜாஜி தெருவை சேர்ந்த மனுதாரார் திரு. மு. நாட்டரசன் என்பவர் சிவகங்கை நகராட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்குண்டான பிடித்தம் செய்யப்பட்டு வழங்கப்பட வேண்டியுள்ள தொகை ரூ.4,80,988/– (ரூபாய் நான்கு லட்சத்து எண்பதாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தெட்டு மட்டும்) விரைவில் வழங்கிட ஆவண செய்யுமாறு தனது புகார் மனுவில் கேட்டுக்கொண்டுள்ளார்.

சிவகங்கை நகராட்சி கோப்புகளை பரிசீலனை செய்யப்பட்டதில், மனுதாரர் கோரியவாறு மனுதாரரால் செய்யப்பட்ட பணிகளில் பிடித்தம் செய்யப்பட்ட தொகையான ரூ.4,80,988/–(ரூபாய் நான்கு இலட்சத்து எண்பதாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தெட்டு மட்டும்) மனுதாரருக்கு

சேரவேண்டிய தொகைதான் என்பதை உறுதி செய்து, 10 தினங்களுக்குள் தொகையை வழங்குவதாக நகராட்சி ஆணையரின் வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தார்.

மேற்படி விசாரணையின் போது சிவகங்கை நகராட்சி ஆணையரால், வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு சிவகங்கை நகராட்சி கோப்புகளை பரிசீலனை செய்ததில் வ.எண். 12 ல் காணும் FSD தொகை ரூ. 7,000/- தவறுதாலாக பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், with held amount 5% தொகை ரூ.16,950/-க்கு மாறாக தவறுதலாக ரூ. 18,059/- என பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்து மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை ரூ. 4,72,880/- மட்டுமே என இறுதி செய்து, மனுதாரர் திரு. மு. நாட்டரசன் என்பவருக்கு இரு காசோலைகளாக ரூ. 4,72,880/- (காசோலை எண். 781637 நாள் 18.12.2024ல் ரூ. 3,11,195/- ம் காசோலை எண். 000444 நாள் 18.12.2024ல் ரூ. 1,61,685/- ம்) வழங்கப்பட்டுள்ளதாக சிவகங்கை நகராட்சி ஆணையரின் அறிக்கை நாள் 26.12.2024ன் வழி தெரிவித்து, அதற்கான பட்டியல்களின் நகல்கள் மற்றும் காசோலைகளின் நகல்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார். எனவே, மனுதாரர்க்கு வழங்கப்பட வேண்டியத் தொகை முழுவதுமாக வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, சிவகங்கை நகராட்சி ஆணயாளரின் அறிக்கையினை ஏற்று இப்புகார் மனு மீதான நடவடிக்கையினை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2024-ஆம் ஆண்டு, டிசம்பர் 27- ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. மு. நாட்டரசன்,
க.எண்.5/1 ராஜாஜி தெரு,
சிவகங்கை, சிவகங்கை மாவட்டம்.

2) ஆணையாளர்,
சிவகங்கை நகராட்சி, சிவகங்கை மாவட்டம்.

3) நகராட்சிகளின்இயக்குநர்,
நகராட்சிகளின்இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை - 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
நகராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை -600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

31/12/24

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)

6/1